


# 03.10.2026 செய்திகள்

## குஜராத் பொது சிவில் சட்ட மசோதா : குடியரசுத் தலைவர் ஒப்புதல்

- இந்தச் சட்டம் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை, திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்தல் உள்ளிட்டவை தொடர்பான சட்டங்களை ஒழுங்குபடுத்துவதையும், கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டம் குஜராத் முழுவதும் மட்டுமின்றி, அந்த மாநிலத்துக்கு வெளியே வசிக்கும் குஜராத்திகளுக்கும் பொருந்தும்.
- அதேவேளையில், இந்தச் சட்டம் அரசமைப்புச் சட்டத்தின் 342-ஆவது பிரிவின் கீழ் வரும் பழங்குடியினருக்குப் பொருந்தாது.
- இதேபோல, அரசமைப்புச் சட்டத்தின் 21-ஆவது பகுதியின் கீழ், தங்களுடைய பாரம்பரிய உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ள தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தாது.
- இந்தச் சட்டத்தின்படி, வழக்கத்தில் உள்ள திருமண முறைகள், மத நம்பிக்கைகள், திருமணச் சடங்குகள், சம்பிரதாயங்களின்படி திரும ணங்களை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இதில்'சப்தபதி', 'நிகாஹ்', 'ஆனந்த் காரஜ்', 'மங்கள ஃபேரா' உள்ளிட்ட திருமணமுறைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.
- திருமணத்தைப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்காக கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணத்தை வேண்டுமென்றே சம ர்ப்பிக்கத் தவறினால், ரூ.10,000 அபராதம் விதிக்கப்படும்.
- ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களைத் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. குஜராத்தில் திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்பவர்கள், அந்த உறவு குறித்த விவரத்தை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த உறவில் பிறக்கும் குழந்தைகள் சட்டப்பூர்வமான குழந்தைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

## ஆந்திராவில் சர்வதேச தோட்டக்கலை மையம்

- ஆந்திர மாநிலம் திருப்பதியை அடுத்துள்ள, அன்னமைய்யா மாவட்டம், மதனப்பள்ளியில் ரூ.1 லட்சம்கோடி செலவில் சர்வதேச தோட்டக்கலை மையம் மற்றும் இந்திய வேளாண்மைப் பள்ளி அமைக்கப்பட உள்ளது.
- மத்திய அரசின் உதவியுடன் ரூ.40 ஆயிரம் கோடி, தனியார் முதலீடு மூலம் ரூ.60 ஆயிரம் கோடி என மொத்தம் ரூ.1 லட்சம் கோடியில் இத்திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.
- இதன் மூலம் 6 லட்சம் ஏக்கர் பழ உற்பத்தி மாநிலத்தில் அதிகரிக்கும்.

## சுற்றுச்சூழல் உணர்திறன்

» காட்கில் குழு

- மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது தொடர்பாக ஆய்வு செய்ய சூழலியல் நிபுணர் மாதவ் காட்கில் தலைமையில் அமைக்கப்பட்ட நிபுணர் குழு தனது அறிக்கையை 2011-ஆம் ஆண்டில் தாக்கல் செய்தது.

- 1.29 லட்சம் சதுர கி.மீ. பரப்பளவை மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி என வரையறுத்த காட்கில் குழு, ஒட்டுமொத்த பகுதியையும் சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதியாக அறிவிக்கப் பரிந்துரைத்தது.

- அந்தப் பகுதியை மூன்றாகப் பிரித்து பிரிவு 1 மற்றும் 2-இல் புது அணைகள் கட்டுதல், ரயில்வே திட்டங்கள், சாலைப் பணிகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்குதல் போன்றவற்றை செய்யக்கூடாது.

- சுரங்கப் பணிகள், பிளாஸ்டிக், ரசாயன உரங்கள் பயன்பாடு ஆகியவற்றை குறிப்பிட்ட கால இடைவெளியில் முற்றிலுமாக நீக்குதல் உள்ளிட்ட பரிந்துரைகளை காட்கில் குழு அளித்திருந்தது.

» கஸ்தூரி ரங்கன் குழு

- காட்கில் குழுவின் அறிக்கை தங்களது மாநில வளர்ச்சியை பாதிக்கும் என்று கூறி கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு, ஏன் கோவா, மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களிலும் எதிர்ப்புக் கிளம்பியது.

- அதைத் தொடர்ந்து அன்றைய மன்மோகன்சிங் அரசு காட்கில் குழுவின் பரிந்துரைகளை மறு ஆய்வு செய்ய இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.கஸ்தூரி ரங்கன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

- கஸ்தூரிரங்கன் குழு தனது அறிக்கையை 2013-இல் தாக்கல் செய்தது. அந்தக் குழு 1.64 லட்சம் சதுர கி.மீ பரப்பளவை மேற்குத் தொடர்ச்சி மலை என வரையறுத்து அதில் 60,000 சதுர கி.மீ பரப்பளவை சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலமாக அறிவிக்கப் பரிந்துரைத்தது.

- அதிகபட்சமாக கர்நாடகத்தில் 20,668 சதுர கி.மீ (1,576 கிராமங்கள்), மகாராஷ்டிரத்தில் 17,340 சதுர கி.மீ.(2,159), கேரளத்தில் 13,108 சதுர கி.மீ,(123) தமிழகத்தில் 6,914 சதுர கி.மீ (135), கோவாவில் 1,461 சதுர கி.மீ. (99) குஜராத்தில் 449 சதுர கி.மீ. (64) பரப்பளவை சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகளாக கஸ்தூரிரங்கன் குழு அடையாளம் கண்டது.

WHY SURESH...

✓ Comprehensive Coverage
✓ Expert Faculty & Mentorship
✓ Rigorous Testing & Analysis
✓ Structured Study Materials
✓ 24/7 Doubt - Clearing Support
✓ Offline Class / Online Class



| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |